**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 12.12.2022**

**Case No : CC 322/2016**

**Deposition of Witness : P.W.1**

| | |
|---|---|
| **Name:** ஜெகவீரபாண்டியன் | **Caste:** |
| **Father / Husband Name:** சிவலிங்கநாடார் | **Calling:** |
| **Village:** சுப்பராயபுரம் | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 66** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 12.12.2022**

முதல் விசாரணை:

நான் சுப்பராயபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அவர்கள் என் ஊரைச் சேர்ந்தவர்கள். என் ஊரில் ஊர் நல கமிட்டி உள்ளது. அதில் நான் தலைவராக உள்ளேன். அந்த கமிட்டி மூலம் கோயில் கொடையை ஏற்பாடு செய்வேன். கடந்த 2016 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கொடைவிழாவின் போது முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றபோது ஆஜர் எதிரிகள் பெண்களிடம் உள்ள முளைப்பாரிகளை வாங்கி உடைத்தார்கள். நான் அதை தட்டி கேட்டேன். இது சம்பந்தமாக முன் விரோதம் ஏற்பட்டது. பின்பு எனது ஊரில் உள்ள நாகர் பெருமாள் கோயில் கொடை விழா கடந்த 30.09.2016 ம் தேதி நடந்தது. இரவு 9.45 மணி அளவில் நானும் எனது மனைவி ஜான்ஸ்கனியும் சென்றோம். கோவில் வாசலில் எதிரிகள் எங்களை வழி மறித்து என்னை பார்த்து முளைப்பாரியை உடைத்தால் உனக்கு என்னடா என்று கேட்டு தேவடியா மவனே என்று கூறி ஆபாசமாக பேசினார்கள். நீ தலைவராக இருந்தால் பெரிய கொம்பா என்று கேட்டார்கள். 1 வது எதிரி சந்திரசேகர் அரிவாளால் வீசினார் நான் விலகி விட்டேன். 2,3 மற்றும் 4 வது எதிரிகள் அருகில் இருந்த விறகு கட்டையால் தாக்க வந்தார்கள். நாங்கள் காப்பாற்றுங்கள் என்று சத்தம் போட்டோம். அந்த சத்தம் கேட்டு கோயிலில் இருந்த ஆட்கள் வந்தார்கள்.

அவர்களை பார்த்த உடன் எதிரிகள் என்னை பார்த்து ஊரை விட்டு காலி செய் இல்லாவிட்டால் பெட்ரோல் ஊற்றி கொலை செய்து விடுவோம் என்று மிரட்டினார்கள்.அவர்களுடன் இருந்த 5 மற்றும் 6 வது எதிரிகளும் உன்னை உயிரோடு கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள். இது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.( **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரிகள் என்னை ஆபாசமாக பேசியதால் எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

புகார் மற்றும் காவல் துறையில் விசாரணையில் நாகர் பெருமாள் கோயில் கொடை விழா என சொல்ல வில்லை என்றால் சரிதான். கோவில் கொடை விழா நடத்துவதற்கு காவல் துறையின் அனுமதி பெறப்பட்டது. காவல் துறையினிர் பாதுகாப்புக்கு வந்தார்களா என்றால் இல்லை. காவல் நிலையம் எங்கள் ஊரில் இருந்து 6 கி.மீ தொலைவில் உள்ளது. என்னிடம் இரு சக்கர வாகனம் உள்ளது. சம்பவ தினத்தன்று காவல் துறையினறுக்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை. விழா கமிட்டி தலைவர் நான் என்பதால் விழாவினை நடத்துவதற்கு காவல் நிலையம் செல்லவில்லை. காவல் நிலையம் போன் எண் உள்ளது. கோவிலில் 1000 நபர்கள் கூடியிருப்பார்களா என்றால் இல்லை 20 நபர்கள் கூடியிருப்பார்கள். ஊரில் மொத்தம் 150 வீடுகள் உள்ளது. 150 வீடுகளும் வரிதாரர்கள் என்றால் சரிதான். எதிரிகள் வரி செலுத்தி வருகிறாரா என்றால் இல்லை. 6 வது எதிரி மட்டும் வரி செலுத்துகிறார். அவ்வாறு 150 வீடுகளில் வரி பெறுவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 1 வது எதிரியிடம் வரி வாங்க மறுத்து அவர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்து பின்பு வரி வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் எனக்கு எதிரிகளின் மீது கோபம் என்றால் இல்லை. அதனால் எதரிகளுக்கு கோயில் சம்பந்தமான எதுவும் தகவல் சொல்லுவதில்லை என்றால் வரி செலுத்ததால் சொல்வதில்லை. எனக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். அங்கு கூட்டத்தில் இருந்தவர்கள் யாரும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் யார் யார் பார்த்தார்கள் என்று புகார் மற்றும் காவல் துறையினர் விசாரணையில் சொல்ல வில்லை என்றால் சரிதான். என்னை எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் இல்லை. நான் சம்பவ தினத்தன்று கோவிலுக்கு செல்ல வில்லை என்றால் சரியல்ல. தற்போது வரை நான் தான் தலைவராக உள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் ஒழுங்காக வரி செலுத்தி வந்தார்கள் என்றும் என்னிடம் எதிரிகள் கணக்கு கேட்டதால் நான் வரி வாங்க மறுத்து வந்தேன் என்றால் சரியல்ல. அடிக்கடி காவல் நிலையம் செல்வேன் என்றால் இல்லை.

அதனால் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மறுநாள் காலை 9.30 மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். காலதாமதத்திற்கு காரணம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(Sd)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.